# தோமினிக் சாவியோ மேல்நிலைப்பள்ளி

திருப்பத்தூர், திருப்பத்தூர் மாவட்டம் - 635 601.
அலுவலகம் - (04179) 220561.

www.dominicsaviohsstpt.com dominicsaviohsstpt@gmail.com
dominicsaviohsstpt@gmail.com dominicsaviohsstpt



**'பாவம் செய்வதை விட சாவதே மேல்'**

## பள்ளிக் கையேடு 2024 - 2025

பெயர் : ........................................

வகுப்பு : .................... பிரிவு ...................... அணி ...............................

தேர்வு எண் : ........................ தொலைபேசி எண் : ...............................

மன்றங்கள் & இயக்கம்: ........................................

இக்கையேட்டினைத் தினமும்
காலை வழிபாட்டிற்குக் கொண்டு வர வேண்டும்

This handbook must be brought to the assembly daily

## பள்ளி அலுவலகம்
## பார்வையாளர் நேரம்

**திங்கள் - வெள்ளி**

**09.00** A.M. - **11.00** A.M.

**03.30** P.M. - **05.00** P.M.

அரசு விடுமுறை நாட்களில்
பள்ளி அலுவலகம் இயங்காது

..........................................................................

**தலைமையாசிரியரை சந்திக்கும் நேரம்**

**09.00** A.M. - **11.00** A.M. திங்கள் - வெள்ளி

தலைமையாசிரியரை சந்திக்க
முன் அனுமதி பெற வேண்டும்

..........................................................................

**ஆசிரியரை சந்திக்கும் நேரம்**

**04.00 - 04.30**

வெள்ளிக்கிழமைகளில் மட்டும்

# தோமினிக் சாவியோ மேல்நிலைப்பள்ளி
# திருப்பத்தூர்.
## மாணவர் சுய விவரம்

சமீபத்தில்
எடுக்கப்பட்ட
புகைப்படம்

1. பெயர் .................................................................................

2. வகுப்பு & பிரிவு ...................... தேர்வு எண் ..................................
   சேர்க்கை எண் ..............................................................................

3. பிறந்த நாள் ...................... வயது ...................... அணி ........................

4. வீட்டு முகவரி ..............................................................................
   ......................................................................................................
   ................................ முதன்மை அலைபேசி .......................................

5. தந்தை ............................................ தாய் ...........................................
   தொழில் ......................................... தொழில் ....................................
   அலுவலக முகவரி ........................... அலுவலக முகவரி .....................
   ....................................................... ..................................................
   ....................................................... ..................................................
   போன் ............................................. போன் .........................................

6. சமயம் ........................ கத்தோலிக்கர் எனில் பங்கு .......................
   சமூகம் ................................. சமூக உட்பிரிவு .................................

7. அங்க அடையாளம் i) ...........................................................................
   ii) .....................................................................................................

8. நம் பள்ளியில் படிக்கும் என் சகோதரர்களின் பெயர்
   i) ............................................ வகுப்பு - பிரிவு ................................
   ii) ........................................... வகுப்பு - பிரிவு ................................

9. ஆதார் எண் & EMIS
   ........................................................... & ............................................

10. உயரம் .................. எடை .................. இரத்த பிரிவு .......................

பள்ளியின் அனைத்து விதிமுறைகளையும் கடைப்பிடிப்பேன் என உறுதி அளிக்கிறேன்.

| தந்தை பாதுகாவலர் கையொப்பம் | தாயின் கையொப்பம் | மாணவர் கையொப்பம் |
|---|---|---|

**குறிப்பு:** முகவரி, தொலைபேசி எண் மாற்றம் ஏற்படும் போது, வகுப்பாசிரியரிடம் கட்டாயம் தெரிவிக்கவும்.

## காலை வழிபாட்டு முறை

1. இறை வணக்கப் பாடல் / தமிழ்த்தாய் வாழ்த்து
2. கொடி ஏற்றுதல் / கொடி வணக்கம்
3. கொடிப் பாடல்
4. உறுதிமொழி
5. திருக்குறள் மற்றும் விளக்கம்
6. செய்தி வாசித்தல் ( தமிழ் மற்றும் ஆங்கிலம்)
7. இன்றைய சிந்தனை / பொது அறிவு / பழமொழி
8. பிறந்த நாள் வாழ்த்து
9. தாளாளர் / தலைமையாசிரியர் / ஆசிரியர் உரை
10. நாட்டுப் பண்

# பொது செபங்கள்

## இறைவணக்கம்

**வகுப்புக்கு முன்**

1. எல்லா வல்ல இறைவா / நாங்கள் தொடங்க இருக்கும் வேலையை / நன் முறையில் தொடங்கி / மன உறுதியுடன் நிறைவேற்றி / அதற்குரிய பயனைப் பெறுமாறு / உமது திருவருளால் / எம்மை நிரப்ப வேண்டுமென்று / உம்மை வேண்டுகிறோம்.

2. அறிவின் உறைவிடமாம் / எம் இறைவா / கல்வியின் மூலம் கரையற்ற உம்மை / காண வேண்டுமென்ற நோக்கத்துடன் / இவ்விடம் குழுமியிருக்கும் எமக்கு / உமது அருளைத் தாரும் / நாங்கள் இன்று கற்கும் கல்வி / எம் நினைவில் நிலைத்திருக்க / ஒளி அருளும்.

3. உண்மையே உருவாய் / எல்லா கலைகளுக்கும் ஆதியுமாய் / இருக்கின்ற எம் இறைவா / உம் திருவடியில் / எம் கல்வியைச் சமர்ப்பிக்கின்றோம் / அதனை ஆசிர்வதியும் / (எம் தேர்வினை நன்முறையில் எழுதுவதற்கு ) எம் மனதினைத் / தெளிவுறச் செய்து எம் நினைவாற்றலுக்கு / உறுதியைத் தாரும்.

## விண்ணுலகில்

விண்ணுலகில் இருக்கின்ற / எங்கள் தந்தையே / உமது பெயர் தூயது எனப் போற்றப் பெறுக / உமது ஆட்சி வருக / உமது திருவுளம் விண்ணுலகில் / நிறை வேறுவது போல / மண்ணுலகிலும் நிறைவேறுக / எங்கள் அன்றாட உணவை / இன்று எங்களுக்குத் தாரும் / எங்களுக்கு எதிராகக் குற்றம் செய்வோரை / நாங்கள் மன்னிப்பது போல / எங்கள் குற்றங்களை மன்னியும் / எங்களைச் சோதனைக்கு உட்படுத்தாதேயும் / தீமையிலிந்து எங்களை விடுவித்தருளும். ஆமென்.

*புனித தோமினிக் சாவியோவே....*
எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

**வகுப்புக்கு பின் :**

1. எமது தந்தையாகிய இறைவா / நாங்கள் தொடங்கிய வேலையைச் / செவ்வனே செய்வதற்கு / நீர் ஈந்த அருள் உதவிகளுக்கு / உமக்கு நன்றி கூறுகிறோம்.

2. என்றென்றும் நிலைத்து நின்று / எம்மை ஆண்டுவரும் / எல்லாம் வல்ல இறைவா / நீர் எமக்கு அருளிய / எல்லா நன்மைகளுக்கும் / (தேர்வினை நன் முறையில் எழுத உதவியதற்கும்) நன்றி நவில்கின்றோம்.

3. அன்பின் இறைவனே / அனைத்துலக ஆண்டவனே / எம் உள்ளங்களில் / அறிவொளி வீசியமைக்கு உமக்கு நன்றி / நாங்கள் பெற்ற / இந்த அறிவொளிப் பாதையில் / மேலும் முன்னேற / உம் அருளை வேண்டுகிறோம்.

*புனித தோமினிக் சாவியோவே*
எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.



## PRAYER BEFORE CLASS

God our loving Father / the source of all truth and wisdom /bless our work and study / which we offer you / Enlighten our mind / strengthen our memory / and direct our will / towards what is right. / Enable us always / to seek the truth / and make us truly wise.

## OUR FATHER

Our Father / who art in heaven /
hallowed be thy name / thy kingdom come /
they will be done / on earth / as it is in heaven /
Give us this day / our daily bread /
and forgive us / our trespasses /
as we forgive / those who trespass against us /
and lead us not / into temptation /
but deliver us / from evil / Amen.

St. Dominic Savio .... Pray for us

## PRAYER AFTER CLASS

We give you thanks / Almighty God /
For all the benefits / you have given us.
St. Dominic Savio .... Pray for us.

## சகாய தாயின் சிறப்பு ஆசீர்

குரு : ஆண்டவர் பெயரால் நமக்கு உதவி உண்டு

எல் : அவரே விண்ணையும் மண்ணையும் படைத்தவர்

குரு : அருள் மிகப் பெற்ற மரியே வாழ்க / ஆண்டவர் உம்முடனே / பெண்களுக்குள் ஆசி பெற்றவர் நீரே. உம்முடைய திருவயிற்றின் கனியாகிய இயேசுவும் ஆசீர் பெற்றவரே

எல் : தூய மரியே / இறைவனின் தாயே / பாவிகளாய் இருக்கின்ற எங்களுக்காக / இப்பொழுதும் எங்கள் இறப்பின் வேளையிலும் / வேண்டிக்கொள்ளும். ஆமென்.

குரு : இறைவனுடைய பரிசுத்த மாதாவே.

எல் : இதோ உமது அடைக்கலமாக ஓடிவந்தோம். எங்கள் அவசரங்களில் நாங்கள் மன்றாடும் வேண்டுதல்களைத் தள்ளாதேயும் / மாண்புமிக்க கன்னிகையே / ஆசி பெற்றவரே, சகல ஆபத்துகளிலிருந்து, எங்களை எப்போதும் விடுவித்துக் காப்பாற்றியருளும்

குரு : அனைவருக்கும் சகாயியான புனித மரியே

எல் : எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்

குரு : ஆண்டவரே என் மன்றாட்டைக் கேட்டருளும்

எல் : எம் கூக்குரல் உம்மிடம் வருவதாக

குரு : ஆண்டவர் உங்களோடு இருப்பாராக

எல் : உம் ஆன்மாவோடும் இருப்பாராக

குரு : செபிப்போமாக

எல்லாம் வல்ல நித்திய இறைவா ................ எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்துவின் வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

எல் : ஆமென்

குரு : எல்லாம் வல்ல இறைவன், தந்தை, மகன், தூய ஆவி உங்கள் அனைவரையும் ஆசீர்வதிப்பாராக.

எல் : ஆமென்.

# புனித தொன்போஸ்கோவின் சிறப்பு ஆசீர்

முத : அன்புத் தந்தையே இறைவா புனித ஜான் போஸ்கோவை இளையோரின் தந்தையாக அனாதைகளின் அடைக்கலமாக இறை அன்பின் அடையாளமாக அனைவக்கும் ஆசிரியராக பூவுலகில் புனிதராக எமக்கு வழுங்கியதற்கு உம்மை போற்றி புகழ்ந்து உமக்கு நன்றி கூறுகின்றோம்.

எங்கள் இளைஞர்கள் பக்தியிலும், ஞானத்திலும், அறிவிலும், நற்பண்புகளிலும் பல்வேறு திறமைகளிலும் நாளும் வளர்ந்து பிறருக்கு முன்மாதிரியாக திகழ உம்மை மன்றாடுகின்றோம். ஆமென்.

குரு : இளைஞர் பணிக்காக இறைவனால் தெரிந்துகொள்ளப்பட்ட புனித தொன்போஸ்கோவே

எல் : எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்

குரு : அனாதைகளுக்கு தந்தையாக அனுப்பப்பட்ட புனித தொன் போஸ்கோவே

எல் : எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்

குரு : இளைஞர்களுக்கு ஆசனாக தேர்ந்தெடுக்கப்பட்ட புனித தொன்போஸ்கோவே

எல் : எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்

குரு : நற்கருணை பக்தியையும், மரியன்னை பக்தியையும் பரப்பின புனித தொன் போஸ்கோவே

எல் : எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்

குரு : செபிப்போமாக

எங்கள் அன்புத் தந்தையே இறைவா, இளையோரின் தந்தையாகவும், நண்பராகவும்

புனித தொன்போஸ்கோவை நீர் உயர்த்தினீர். உம் தூய அன்னையின் உதவியால் உயர்த்தப்பட்ட அவர் இளையோரின் ஆன்மாக்களை ஈடேற்றினார். அதே அன்பால் தூண்டப்பட்ட நாங்களும் ஆன்மாக்களுக்கு சேவை செய்து உம்மை புகழ அருள் தர வேண்டும் என்று எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகின்றோம்.

எல் ஆமென்

குரு புனித தொன் போஸ்கோவே

எல் எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்



## தோமினிக் சாவியோ சிறப்பு ஆசீர்

முத : எங்கள் அன்புத் தந்தையே இறைவா புனித தோமினிக் சாவியோ இளையோரின் பாதுகாவலராகவும் படிப்பிற்கு தூண்டுகோலாகவும் விளங்குகிறார். எங்கள் இளைஞர்கள் பக்தியிலும் ஞானத்திலும் அறிவிலும் நற்பண்புகளிலும் பல்வேறு திறமைகளிலும் நாளும் வளர்ந்து பிறருக்கு முன் மாதிரியாக திகழ உம்மை மன்றாடுகிறோம். ஆமென்

குரு : எல்லாம் வல்ல இறைவன் உங்களை எல்லாத் தீமைகளிலிருந்தும் பாதுகாத்து தம் ஆசியைப் பொழிவாராக

எல் : ஆமென்

குரு : இறைவன் உங்களைத் தம் அருள்வாக்கில் ஆவல்கொள்ளச் செய்து முடிவில்லா மகிழ்ச்சியில் உங்கள் இதயங்களை நிரப்புவாராக.

எல் : ஆமென்

குரு : நீங்கள் நல்லவற்றையும் நேர்மையானவற்றையும் கண்டுணர்ந்து, இறைவனின் வழியில் தொடர்ந்து நடந்து புனிதரோடு விண்ணகத்திற்கு உரிமைப் பெற வரமருள்வாராக.

எல்: ஆமென்

குரு : புனித தோமினிக் சாவியோவின் நினைவு நாளை கொண்டாடும் நீங்கள், என்றும் பணிவுடையவர்களாக வாழவும் இறை அன்பில் வளர ஆர்வம் கொள்ளவும் இறைவன் அருள்புரிவாராக

எல் : ஆமென்

குரு : இறைபக்தி, அறிவுரைக் கூறுதல் என்னும் பல்வேறு கொடைகளை புனித தோமினிக் சாவியோவிற்கு வழங்கிய அதே தூய ஆவி, ஆர்வமோடு இறைவனைத் தேடவும் உடன் பயில்கின்றவர்களுக்காக உழைக்கவும் உங்களுக்கு உதவுவாராக

எல் : ஆமென்

குரு : புனித தோமினிக் சாவியோவே

எல் : எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்

## உறுதி மொழி

இந்தியா என் தாய் நாடு / இந்தியர் யாவரும் / என் உடன் பிறந்தோர் / என் தாய் நாட்டை / உளமாற நேசிக்கிறேன். / என் நாட்டின் / வளமான பல்வகை மரபினை எண்ணிப் பூரிப்படைகிறேன். / அதன் பெருமைக்கேற்ப என்னை தகுதியாக்கிக்கொள்ள / என்றும் பாடுபடுவேன். என் பெற்றோர் / ஆசிரியர் மூத்தோர்களை மதித்து யாவரிடமும் பணிவன்புடன் நடந்துகொள்வேன். / என் நாட்டு மக்களின் வாழ்விலும் வளர்ச்சியிலுமே / என் மகிழ்ச்சி உள்ளதால் என் நாட்டிற்கும் நாட்டு / மக்களுக்கும் என் பணியை உரிமையாக்க / உறுதியளிக்கிறேன்.

## தமிழ்த் தாய் வாழ்த்து

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமிதில்
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடர்நல் திருநாடும்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே!
தமிழணங்கே!
உன் சீரிளமைத் திறம்வியந்து
செயல்மறந்து வாழ்த்துதுமே! வாழ்த்துதுமே! வாழ்த்துதுமே!

மனோன்மணியம் பெ.சுந்தரம்பிள்ளை

## நாட்டுப்பண்

ஜன கண மண அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல வங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவ சுப நாமே ஜாகே
தவ சுப ஆசிஸ மாகே
காஹே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
ஜய ஹே ஜய ஹே ஜய ஹே
ஜய ஜய ஜய ஜய ஹே

- மகாகவி இரவீந்திரநாத் தாகூர்

## பாடல்கள்

**1. பள்ளிக் கொடியின் பாடல்**

தூய நீலமான ஒளி வீசிட
சுற்றுமின்பமான வெள்ளை மின்னிட
உயரக்கம்ப உச்சியிற்கொடி-ஏறி
வானளாவி காற்றிலாடுதே

வாரீர் தூய்மை, வாய்மை
என்றும் நம்மில் வளர்ப்போம்
அவர் பாதம் நாம் சேர்ந்து
அன்பின் கீதம் என்றும் பாடுவோம்
தூய சாவியோ பள்ளிக்கொள்கையை
கொண்டு தேச சேவை செய்து வாழ்ந்திட
சர்வ வல்ல தேவனருளால் பாரில்
என்றும் வாழ்வோம் இன்பமாகவே-தூய நீலமான......

**2. ஒளியாய் விளங்கும் பரம்**

ஒளியாய் விளங்கும் பரம் பொருளே
உலகிற் கெல்லாம் முதல் பொருளே
அன்பே உருவாய் விளங்கிடுவாய்
அதனை எமக்கு அருள் புரிவாய்

உலகம் குடும்பம் தந்தை நீ
உந்தன் மக்கள் யாமெல்லாம்
ஒற்றுமை கொண்டே வாழ்ந்திடவே
ஒருவர்க் கொருவர் உதவிடவே (ஒளியாய்)

**3. உன் திருயாழில்**

உன் திருயாழில் என் இறைவா பல
பண் தரும் நரம்புண்டு
என்னையும் ஓர் சிறு நரம்பெனவே - அதில்
இணைத்திட வேண்டும் இசையரசே!

யாழினை நீயும் மீட்டுகையில் இந்த
ஏழையின் இதயம் துயில் கலையும்
யாழிசை கேட்டுத் தனை மறந்து ...(2) உந்தன்
ஏழிசையோடு இணைந்திடுமே (2)
(உன் திருயாழில்)

உன் ஒளி திருநாள் நடனமதைக் கண்டு
என் சிறு இதயம் களிகூறும்
மன்னவன் உன்முக ஒளிசிதறும் .... (2) எழில்
புன்னகை யோடெந்தன் வாழ்விணையும் (2)
(உன் திருயாழில்)

**4. அமைதியின் தூதனாய்**

அமைதியின் தூதனாய் என்னையே மாற்றுமே
அன்பனே இறைவனே என்னிலே வாருமே
அமைதியின் தூதனாய் என்னையே மாற்றுமே

பகைமை உள்ள இடத்தில் பாசத்தை வளர்க்கவும்
வேதனை நிறைந்த மனதில் மன்னிப்பு வழங்கவும்
கலக்கம் அடையும் வாழ்வில் நம்பிக்கை ஊட்டவும்

தளர்ச்சி ஓங்கும் பொழுது மனதிடம் தழைக்கவும் - 2
இருளே சூழும் வேளை ஒளியை ஏற்றவும்
துயரம் வாட்டும் நேரம் உதயம் காணவும்

ஆறுதல் அன்பை அளித்து புரிதலை வளர்க்கவும்
கொடுப்பதில் நிறைவை கண்டு மன்னித்து வாழவும்
தன்னலம் ஒழித்து புதிய உலகம் படைக்கவும்
- தூய பிரான்ஸிஸ் அசிசியார்

**5. இளைஞரின் தந்தை**
இளைஞரின் தந்தை தொன்போஸ்கோவே - எங்கள்
இறைவனின் தூதரே வாழியவே (2)

வாபர் வாழ்வினை அமைத்தவரே - அருள்
வழி தன்னைக் காட்டிய போதகரே - (2)
வறியவர் உயர்ந்திட உழைத்தவரே - உயர்
வரங்களை எமக்கருள் புரிவீரே
- இளைஞரின் தந்தை

அன்பென்னும் அறமதை வளர்த்தவரே - அதில்
ஆண்டவர் திருவுள்ளம் கண்டவரே - (2)
கல்வியில் கனிவினைக் கலந்தவரே - உம்மை
காலமெல்லாம் யாம் புகழ்வோம்.
- இளைஞரின் தந்தை

**6. நீயே நிரந்தரம்**
நீயே நிரந்தரம் இயேசுவே என் வாழ்வில்
நீயே நிரந்தரம்

அம்மையப்பன் உந்தன் அன்பே நிரந்தரம்
மாறும் உலகில் மாறா உன் உறவே நிரந்தரம்
இம்மை வாழ்வில் மறுமை இருப்பது நிரந்தரம் - நான்
மாண்ட பின்பும் உன்னில் உயிர்ப்பது நிரந்தரம்
நிரந்தரம் - 2 நீயே நிரந்தரம் -2 ( 2 )

தாயின் அன்பு சேய்க்கு இங்கே நிரந்தரம்
தாயும் தந்தையும் எமக்கு நீயே நிரந்தரம்
தேயும் வாழ்வில் நம்பிக்கை நீயே நிரந்தரம் - நான்
சாயும் போது காப்பது நீயே நிரந்தரம்
நிரந்தரம் -2 நீயே நிரந்தரம் - 2 ( 2 )

செல்வங்கள் கொணரும் இன்பத்தில் இல்லை நிரந்தரம்
பதவியும் புகழும் தருவது இல்லை நிரந்தரம்
நிலைவாழ்வு என்னும் நிஜமான நீயே நிரந்தரம் அதன்
விலையாக எனை நீ உன்னில் இணைப்பாய் நிரந்தரம்
நிரந்தரம் - 2 நீயே நிரந்தரம் - 2

**7. வாழ்க தொன்போஸ்கோ**
வாழ்க தூய தொன் போஸ்கோ
வாழிய வாழ்கவே
வாழ்வின் வழியைக் காட்டி
வானகம் சேர்ப்பாயே

இறையழைப்பினை ஏற்று
இந்த இகமதிலே
இறையன்னையின் வழியில்
எந்நாளும் எப்போதும் இப்பாரினில் வாபர்
வாழ்ந்திட உழைத்தீரே ( வாழ்க )

கொடுமை வறுமையில் வாடி
வெறும் சருகாகும்
இளம் இதயங்களெல்லாம்

அன்போடு எந்நாளும் இவ்வையகம்
வாழும் தொன்போஸ்கோ வாழியவே ( வாழ்க )

**8. ஓ பரிசுத்த ஆவியே**

ஓ பரிசுத்த ஆவியே - என்
ஆன்மாவின் ஆன்மாவே - உம்மை
ஆராதனை செய்கின்றேன் - இறைவா
ஆராதனை செய்கின்றேன்.

என்னை ஒளிரச்செய்வது வழிகாட்டும் - புது
வலுவூட்டி என்னைத் தேற்றும் - என்
கடமை என்னவென்றும் காட்டும் - அதை
கருத்தாய் புரிந்திட தூண்டும்
என்ன நேர்ந்தாலும் நன்றி துதி கூறி
பணிவேன் என் இறைவா - உந்தன்
திருவுளபடி என்னை நடத்தும்.

**9. ஒரு வரம் நான் கேட்கின்றேன்**

ஒரு வரம் நான் கேட்கின்றேன்
திருப்பதம் நான் பணிகின்றேன்
மனிதனாக முழு மனிதனாக
வாழும் வரம் நான் கேட்கின்றேன்

நிறையுண்டு என்னில் குறையுண்டு
நிலவின் ஒளியிலும் இருளுண்டு
புகழுண்டு என்றும் இகழ்வுண்டு
இமய உயர்விலுல் தாழ்வுண்டு
மாற்ற இயல்வதை மாற்றவும்
அதற்குமேல் அதை ஏற்கவும்
உனது அருள்தந்து மனித
நிலைநின்று வாழ வரம் தருவாய்

உறவுண்டு அதில் உயர்வுண்டு
இணைந்த தோள்களில் உரமுண்டு
இல்லமுண்டு சுற்றம் நட்புண்டு
இதழ்கள் இணைந்தால் மலருண்டு
மகிழ்வாரோடு நான் மகிழவும்
வருந்துவாருடன் வருந்தவும்...... உனது அருள்

**10. ஆவே கீதம் பாடியே**

ஆவே கீதம் பாடியே
உன் புகழைப் பாடுவேன்
உன் அன்பின் பெருமை அகிலம் விளங்கும்
மாண்பை போற்றுவேன் ஆவே.... ஆவே.... ஆவே....

பாவிகளின் ஆதரவே பாருலகோர் ஒளியே
அன்பின் தாய் நீயே என் குரல் கேளம்மா ஆவே...

தாயெனவே நாம் அழைப்போம் தாயன்பில் வாழுவோம்
மாய உலகினில் காத்திடுவாய் அம்மா ஆவே...

**11. அன்னைக்கு கரம் குவிப்போம்**

அன்னைக்கு கரம் குவிப்போம் - அவள்
அன்பை பாடிடுவோம் - 2
அன்னைக்கு கரம் குவிப்போம்

கன்னிமையில் இறைவன் உருகொடுத்தார் - அந்த
முன்னவனின் அன்னை எனத் திகழ்ந்தாள் - 2
மனுக்குலம் வாழ்ந்திட பாதை படைத்தாள் - 2
தினம் அவள் புகழினைப் பாடிடுவோம்

பாவமதால் மனிதன் அருளிழந்தான் - அன்று
பாசமதால் அன்னை கருணை கொண்டாள் - 2
பாரினில் வாடினோர் வாழ்வு கண்டார் - 2
பாரினில் அவள் புகழ் பாடிடுவோம்

**12. மாசில்லாக் கன்னியே**

மாசில்லாக் கன்னியே மாதாவே உம்மில்
நேசமில்லாதவர் நீசரேயாவார்
வாழ்க வாழ்க வாழ்க மரியே - 2

மூதாதை தாயார் செய் முற்பாவமற்றாய்
ஆதியில்லாதோனை மாதே நீ பெற்றாய் - வாழ்க

தாயே நீர் ஆனதால் தாபரித் தெம்மை
நேயமில்லாதோனை தாயே நீ பெற்றாய் - வாழ்க

அமலமரியே உன் மாண்பினைப் பாடுவோம்
மீட்பராம் கிறிஸ்துவோடு ஆட்சி புரிவாய் - வாழ்க

விண்ணகம் பாடும் அம்மா உன் மகிமை
மண்ணகத்தின் புதல்வர் உம் நாமம் சொல்வோம் - வாழ்க

**13. என்ன அழகு உன் அருள் அழகு**

என்ன அழகு உன் அருள் அழகு
என்ன அழகு உன் அன்பழகு -2
ஏவனின் நீர்ச்சுமையே.. தாவீதின் கோபுரமே..
சாரோனின் மலரழகே... சீயோனின் அருள் மகளே...
என்ன அழகு.... அம்மா

கன்னிமையின் தூய்மையும் தாழ்ச்சியின் மென்மையும்
வார்த்தையின் உண்மையும் கொள்ளைக்கொண்டதே
என்னை கொள்ளைத்கொண்டதே...2
ஏசுவின் தாசனாய் என்னை வாழவைத்ததே-2
அன்பே...அருளே...அமுதே...அழகே...நீ வாழ்க...-2
என்ன அழகு.. அம்மா
அன்பு விழி கருணையும் வாழ்வினில் எளிமையும்

விதையாய் என் நெஞ்சினில்
விளைந்திடுமே கணிந்திடுமே-2
வளமையும் வசந்தமும் தஞ்சம் கொள்ள வந்ததே-2
அன்பே...அருளே...அமுதே...அழகே..நீ வாழ்க-2
(என்ன அழகு) அம்மா

**14. தாயே உன் பாத மலரினிலே**

தாயே உன் பாத மலரினிலே
என்றும் வாடாத மலராக நானிருப்பேன்
தாய் என்னை மறந்தாலும் நீ மட்டும் நாளும்
சேயாக அணைக்கின்ற தாய்மரி நீயே

கல்வாரி மலை மீது எமக்கான உறவால்
கனிவோடு வந்தாயே தாய் என்ற நினைவால்
கடனும் பெரியது உன் உள்ளம் அம்மா
கடுகினும் சிறிய என் துயர் தீர்ப்பாயே

துன்பத்தின் ஆழத்தை கண்டவர் நீயே
துன்புற்ற போது துவளாத தாயே
வாழ்க்கையின் விதிமுறை எமக்குரைத்தாயே
வாவென பார்வையில் எமை அழைத்தாயே

**15. ஞானம் நிறைக்கன்னிகையே**

ஞானம் நிறைக்கன்னிகையே
நாதனை தாங்கிய ஆலயமே
மாண்புயர் ஏழு தூண்களுமாய்
பபீடமுமாய் அலங்கரித்தாயே

பாவ நிழலே அணுகா
பாதுகாத்தார் உன்னையே பரமன்
தாயுதரம் நீ தரித்திடவே
தனதோர் அமல தலமெனக் கொண்டார்- ஞானம்

**16. ஒருபோதும் உனைப் பிரியா**

ஒருபோதும் உனைப் பிரியா
நிலையான உறவொன்று வேண்டும்
என் உடல் கூட எரிந்தாலும்
உன் நாமம் நான் சொல்ல வேண்டும்
நினைவிலும் நீயே என் கனவிலும் நீயே — 2
நீங்காத நிழலாக வா இறைவா

உன் கையில் என்னை நீ பொறித்தாய்
பெயர் சொல்லி அன்பாய் என்னை அழைத்தாய் — 2
ஏன் என்னை நீ தெரிந்தாய்
என் வாழ்வில் ஏன் நுழைந்தாய்
உன் மாறாத அன்பில் மகிழ்வொன்று கண்டேன்
தாய் உறவொன்று தேடும் பிள்ளை போல் நின்றேன்
உன்னோடு நான் வாழுவேன்

நீர் தேடும் மான் போல தேடி வந்தேன்
நீயின்றி வாழ்வில்லை என்றுணர்ந்தேன் — 2
என்னுள்ளே வாழும் தெய்வம்
என்னை நீ ஆளும் தெய்வம்
என் இயேசு நீயே என்னுள்ளம் நின்றாய் — நிதம்
என் பாதை முன்னே நீதானே சென்றாய்
உன்னோடு நான் வாழுவேன்

**17. பார்க்கும் முகமெல்லாம் இறைசாயல் தெரிகிறதே**

கேட்கும் மொழியெல்லாம் இறைவார்த்தை ஒலிக்கிறதே
திரும்பிடும் திசையெல்லாம்
எழில் கொஞ்சும் இறையழகே
அசைகின்ற அணுவெல்லாம் மகத்தான இறைசெயலே
பார்க்கும் முகமெல்லாம் இறைசாயல் தெரிகிறதே
கேட்கும் மொழியெல்லாம் இறைவார்த்தை ஒலிக்கிறதே

பனியின் துளியில் இறைமுகம் பார்க்கின்றேன்
இலையின் அசைவில் இறை இசை கேட்கின்றேன்
இறைவா... இறைவா...
பனியின் துளியில் இறைமுகம் பார்க்கின்றேன்
இலையின் அசைவில் இறை இசை கேட்கின்றேன்
வீசிடும் காற்றெல்லாம் இறைசுவாசமே
மலர்களின் மணமெல்லாம் இறைவாசமே (2)
உயிரே உணர்வே உன் புகழ்பாடி மகிழ்வேனே

நிலத்தின் விளைவெல்லாம் இறைப் புன்னகை
கனியின் சுவையெல்லாம் இறை இன்பமே
இறைவா... இறைவா...
நிலத்தின் விளைவெல்லாம் இறை புன்னகை
கனியின் சுவையெல்லாம் இறை இன்பமே
கடலின் அலையெல்லாம் இறைராகமே
பொழிந்திடும் மழையெல்லாம் இறை தாளமே (2)
வியப்பே விந்தையே உன் புகழ்ப்பாடி புகழ்வேனே

**18. உன் புகழைப் பாடுவது என்**
உன் புகழைப் பாடுவது என்
வாழ்வின் இன்பமைய்யா
உன் அருளைப் போற்றுவது என்
வாழ்வின் செல்வமைய்யா

துன்பத்திலும் இன்பத்திலும் நல்
தந்தையாய் நீ இருப்பாய்
கண்ணயரக் காத்திருக்கும் நல்
அன்னையாய் அருகிருப்பாய் (2)
அன்பு எனும் அமுதத்தினை நான்
அருந்திட எனக்களிப்பாய்
உன்நின்று பிரியாமல்
நீ என்றும் அணைத்திருப்பாய் (2) — உன் புகழை
பல்லுயிரை படைத்திருப்பாய் நீ

என்னையும் ஏன் படைத்தாய்
பாவத்திலே வாழ்ந்திருந்தும் நீ
என்னையும் ஏன் அழைத்தாய் (2)
அன்பினுக்கு அடைக்கும் தாழ்
ஒன்று இல்லை என்றுணர்ந்தேன்
உன் அன்பை மறவாமல்
நான் என்றும் வாழ்ந்திருப்பேன் (2) - உன் புகழை

**19.அன்பே என் தெய்வமே என் அருகில் நீ என்றும் இரு**

அன்பே என் தெய்வமே என் அருகில் நீ என்றும் இரு
எல்லாம் மறைந்தாலும் நீ எந்நாளும் என்னோடிரு
பொழுது சாய்ந்தாலும் நீ போகாமல் என்னோடிரு
இரவு சூழ்ந்தாலும் நின்று எரிகின்ற விளக்காயிரு
தந்தையே தாயே சொந்தங்கள் நீயே
பிரியாத உறவே நீ மட்டும் தானே
உன் அன்பு உன் துணை இல்லையென்றால்
வாழ்வில்லை நானில்லை ஏதுமில்லை 2

காக்கின்ற கரமாயிரு என்னை
ஆட்கொள்ளும் அன்பாயிரு
வழியாக ஒளியாயிரு என்னை
வாழ்விக்கும் உயிராயிரு
துணையாக நீ இருந்தால்
என்றும் தனியாக நானில்லையே
இருளில்லை புயலில்லையே
நெஞ்சில் பயமில்லை துயரில்லையே
தந்தையே தாயே சொந்தங்கள் நீயே
பிரியாத உறவே நீ மட்டும் தானே
உன் அன்பு உன் துணை இல்லையென்றால்
வாழ்வில்லை நானில்லை ஏதுமில்லை 2
வாழ்வுக்கு முதலும் நீதான்,
வாழ்க்கை புதிருக்கு பதிலும் நீதான்

தஞ்சம் உன் பாதங்கள்தான்,
எந்தன் செல்வம் உன் பேரன்புதான்
என் தெய்வம் நீயிருக்க இங்கு
வேறெங்கு நான் செல்லுவேன்
நீ பேசும் ஒரு வார்த்தையால்
இந்த பூலோகம் நான் வெல்லுவேன்
தந்தையே தாயே சொந்தங்கள் நீயே
பிரியாத உறவே நீ மட்டும் தானே
உன் அன்பு உன் துணை இல்லையென்றால்
வாழ்வில்லை நானில்லை ஏதுமில்லை

**20. தமிழால் உன் புகழ் பாடி தேவா நான் தினம் வாழ**
தமிழால் உன் புகழ் பாடி தேவா நான் தினம் வாழ
வருவாயே திருநாயகா வரம் தருவாயே உருவானவா

எனைச்சூழும் துன்பங்கள் கணையாக வரும்போது
துணையாகி எனையாள்பவா (2)
மனநோயில் நான் மூழ்கி மடிகின்ற பொழுதங்கு -2
குணமாக்க வருவாயப்பா
எனை உனதாக்கி அருள்வாயப்பா

உலகெல்லாம் இருளாகி உடனுள்ளோர் சென்றாலும்
வழிகாட்டும் ஒளியானவா (2)
நீதானே எனக்கெல்லாம் நினைவெல்லாம் நீதானே -2
நாதா உன் புகழ்பாடுவேன்
எனை நாளெல்லாம் நீ ஆளுவாய்

**21. உன் புகழைப் பாடுவது என்**
உன் புகழைப் பாடுவது என்
வாழ்வின் இன்பமைய்யா
உன் அருளைப் போற்றுவது என்
வாழ்வின் செல்வமைய்யா

துன்பத்திலும் இன்பத்திலும் நல்
தந்தையாய் நீ இருப்பாய்
கண்ணயரக் காத்திருக்கும் நல்
அன்னையாய் அருகிருப்பாய் (2)
அன்பு எனும் அமுதத்தினை நான்
அருந்திட எனக்களிப்பாய்
உன்நின்று பிரியாமல்
நீ என்றும் அணைத்திருப்பாய் (2) - உன் புகழை

பல்லுயிரை படைத்திருப்பாய் நீ
என்னையும் ஏன் படைத்தாய்
பாவத்திலே வாழ்ந்திருந்தும் நீ
என்னையும் ஏன் அழைத்தாய் (2)
அன்பினுக்கு அடைக்கும் தாழ்
ஒன்று இல்லை என்றுணர்ந்தேன்
உன் அன்பை மறவாமல்
நான் என்றும் வாழ்ந்திருப்பேன் (2) - உன் புகழை

**22. இயற்கையின் அழகினில் உனைக்காண்பேன்**
இயற்கையின் அழகினில் உனைக்காண்பேன் - 2
இசைத்திடும் மரங்களில் பனிவிழும் இலைகளில்
நிறம்பெறும் மலர்களில் மாபரனில்
உனைப்பார்த்திடுவேன்
அனைத்திலும் இறைவனைக் காண்பேன்
அனைத்தையும் இறைவனாய் காண்பேன் (இயற்கையின்)

காலையில் எழுந்திடும் கதிரவன் ஒளிதர
கண்டிடுவேன் உன் காட்சியினை
சோலையில் அலைந்திடும் காற்று தழுவிட
கண்டிடுவேன் உன் ஆற்றலினை
மனிதர்களில் மனங்களிலே

மகிழ்வளிக்கும் உறவினிலே
நீ எந்நாளும் தருகின்ற எல்லையில்லா அன்பிலே
கண்டிடுவேன் உனை வாழ்த்திடுவேன்
அனைத்திலும் இறைவனைக் காண்பேன்
அனைத்தையும் இறைவனாய் காண்பேன்

தரையில் நிமிர்ந்திடும் மலைகளின் சரிவினில்
கண்டிடுவேன் உன் மாட்சிதனை
கரையினில் உரசிடும் அலைகளின் நடுவினில்
கண்டிடுவேன் உன் ஆட்சியினை
பறவைகளின் சிறகினிலே மழலைகளின் சிறப்பினிலே
உன் படைப்புகள் அனைத்திலும் தவழ்ந்திடும் தனித்துவம்
கண்டிடுவேன் உனை வாழ்த்திடுவேன்
அனைத்திலும் இறைவனைக் காண்பேன்
அனைத்தையும் இறைவனாய் காண்பேன் (இயற்கையின்)

## 23. O Give Thanks

O give thanks to the Lord for he is good - 3
Yes eternal is His Love

I Will sing to my God never ceasing
All my life I will tell of His wonders,
He's the maker of all earth and heaven
of the ocean, the seas and all they hold.

The almighty is faithful for ever
He is just to the poor and the outraged
It is he who gives bread to the hungry
who delivers the captives from their chains.

## 24. Praise Him

Praise Him Praise Him
Praise Him in the morning

Praise Him in the noontime
Praise Him when the sun goes down
1. Love Him 2. Serve Him 3. Thank Him

## 25. Birthday Song

Happy Birthday tra la, la, la, la
Happy Birthday tra la, la, la, la
Happy Birthday tra la, la, la, la
We wish you a happy birthday
May God bless you
Long life to you

## 26. Birthday Song

Happy birthday to you - 2
Happy birthday to you father / dear sir
Happy birthday to you

And may God bless you...

A long life to you ....

## 27. Birthday Song

சந்தோஷ பூக்கள் எங்கெங்கும் தூவி
சங்கீதம் பாடி மகிழ்ந்திடுவோம் (2)

1. Happy birthday to you - 4

2. And may God bless you - 4

3. long long life to you - 4

## 28. Bind us together, Lord

Bind us together, Lord
Bind us together
With cords that cannot be broken
Bind us together, Lord
Bind us together
Bind us together in Love

There is only one God,
There is only one King
There is only one Body,
That is why we sing.

We are the family of God
We are the promise divine
We are God's chosen desire
We are the glorious new wine.

## 29. Make me a channel of your peace

Make me a channel of your peace
Where there is hatred let me bring your love
Where there is injury, your pardon Lord
And where there is doubt true faith in You

Oh, Master grant that I may never seek
So much to be consoled as to console
To be understood as to understand
To be loved as to love with all my soul

Make me a channel of your peace
Where there is despair in life let me bring hope
Where there is darkness only light
And where there's sadness ever joy

Make me a channel of your peace
It is in pardoning that we are pardoned
It is in giving to all men that we receive
And in dying that we are born to eternal life

## 30. All to Jesus, I surrender

All to Jesus, I surrender
All to Thee I freely give
I will ever love and trust You
In Your presence daily live

I surrender all, I surrender all
All to Thee, my blessed Savior
I surrender all

All to Jesus, I surrender
Lord, I give myself to Thee
Fill me with Your love and power
Let Your blessing fall on me

## 31. This is my prayer to thee, my lord

This is my prayer to thee, my lord
strike, strike at the root of penury in my heart.

Give me the strength lightly to bear my joys and sorrows.
Give me the strength to make my love fruitful in service.
Give me the strength never to disown the poor or bend my knees before insolent might.

There shall be showers of blessing:
This is the promise of love;
There shall be seasons refreshing,
Sent from the Savior above.

Showers of blessing,
Showers of blessing we need:
Mercy-drops round us are falling,
But for the showers we plead.

There shall be showers of blessing:
Send them upon us, O Lord;
Grant to us now a refreshing,
Come and now honor Thy Word.

**32. Every tiny star that Twinkles in the night sky,**

Every tiny star that Twinkles in the night sky,
Every drop of morning dew,
Every spark of fire Blazing in the furnace,
Every captivating view,
Every rainbow in the sky,
Every pretty butterfly,
Tells the fascinating news
To those who dare to hope.

And the message is,
God Still loves the world.
God still,still loves the world.
So,throw your life into his hands,
Day by day discern his plans,
God is passionately busy loving you and me.

Every ocean wave that breaks upon the sea-shore,
Every stalk of golden wheat.
Every silver stream that gushes down the mountain,
Every drop of honey sweet.
Every eagle flying high, Every worm that wriggles by, Tells the fascinating news to those who dare to hope;

And the message is
God still loves the world
God still,still loves the world
So throw your life into his hands,
Day by day discern his plans
God is passionately busy loving you and me

## 33. Like a sunflower that follows

Like a sunflower that follows
Every moment of the sun,
So I turn towards You, to follow You my God. (2)

1.In simplicity, charity I follow (2)

2.In simplicity, honesty I follow (2)

3.In simplicity, fidelity I follow (2)

# SUCCESSION LIST OF RECTORS CORRESPONDENT

| S. NO. | NAME | YEAR |
|---|---|---|
| 1. | REV. FR. PETER MATHEW FERNANDO | 1978 – 1980 |
| 2. | REV. FR. GNANAM | 1980 – 1983 |
| 3. | REV. FR. PETER RAJAMANICKAM | 1983 – 1989 |
| 4. | REV. FR. BALRAJ IMMANUEL | 1989 – 1994 |
| 5. | REV. BRO. JOSEPH DOSS | 1994 – 1999 |
| 6. | REV. FR. SIBY MATHEW | 1999 – 2000 |
| 7. | REV. FR. ARULANANDAN PERIYA NAYAGAM | 2000 – 2003 |
| 8. | REV. FR. AMALRAJ CAPHAEL | 2003 – 2009 |
| 9. | REV. FR. SALAMON KUZHANDAISAMY | 2009 – 2012 |
| 10. | REV. FR. MICHAEL VIYAGULAM | 2012 – 2014 |
| 11. | REV. FR. FRANCIS XAVIER | 2014 – 2020 |
| 12. | REV. FR. GREGORY DEVARAJAN | 2020 – 2023 |
| 13. | REV. FR. JESU MANICKAM | 2023 |

# SUCCESSION LIST OF HEADMASTER

| S. NO. | NAME | YEAR |
|---|---|---|
| 1. | REV. FR. VADACHERY | 1978 – 1979 |
| 2. | REV. FR. Y. JOHN | 1979 - 1980 |
| 3. | REV. FR. LOURDUSAMY | 1980 – 1983 |
| 4. | REV. FR. JESUDAS | 1983 – 1988 |
| 5. | REV. FR. PE. ANTONY POTTAKERY | 1988 – 1992 |
| 6. | REV. FR. SIBY MATHEW | 1992 – 2001 |
| 7. | REV. FR. K. JAYAPRAKASH REDDY | 2001 – 2003 |
| 8. | REV. FR. FRANCIS XAVIER | 2003 – 2006 |
| 9. | REV. FR. JOHN SANTHOSAM | 2006 – 2010 |
| 10. | REV. FR. K. JAYAPRAKASH REDDY | 2010 – 2012 |
| 11. | REV. FR. L. ARUL LOURDUSAMY | 2012 - 2017 |
| 12. | REV. FR. GERALD MIRANDA | 2017 – 2018 |
| 13. | REV. FR. AROCKIAM SAGAYARAJ | 2018 – 2020 |
| 14 | REV. FR. MARIA ASHOK KUMAR | 2020 – 2022 |
| 15 | REV. FR. ROBBERT XAVIER | 2022 – 2023 |
| 16 | REV. BRO. DR. ANANDHARAJ | 2023 – 2024 |
| 18 | REV. FR. J. STEPHEN KULANDAI RAJ | 2024 |

## MEMBERS OF THE STAFF 2024-2025

### THE MANAGEMENT

**1. Rev. Fr. Jesu Manickam** SDB
Rector & Correspondent

**2. Rev. Fr. Stephen Kulandai Raj** SDB
Headmaster

**3. Rev. Bro. Neethiappa Arulappan** SDB
Administrator

**4. Rev. Fr. Felix Raja Mani** SDB
Vice Rector & Dean

**5. Rev. Fr. Jesudoss** SDB
Counselor & Confessor

### POST GRADUATE STAFF

1. **Mr. A. Navyraj** M.Sc., B.Ed., M.Phil. AHM
2. **Mr. K. Lenin** M.Sc., B.Ed., M.Phil., PGDCA.
3. **Mr. P. Tamil Vendan** M.A., B.Ed.
4. **Mr. A. Stephen Selvaraj** M.A., B.Ed.
5. **Mr. X.M.A. Fredrick** M.A., B.Ed., M.Phil.
6. **Mr. K. Dhamodharan** M.Sc., B.Ed.
7. **Mr. M. Prabakar** M.Com. M. Ed.
8. **Mr. A.Justin Rayappa** M.Sc.,M.Phil.,B.Ed.,
9. **Dr.K. Ramesh** M.Tech (VLSI)., Ph.D.
10. **Dr.C. Sampath** M.E (PRES) Ph.D.

## GRADUATE STAFF

11. **Mr. M. Martin Joseph** M.A., B.Ed., AHM
12. **Mrs. S. Praba Gracy** B.Sc., B.Ed., M.A.
13. **Mr. S. Gunaseelan** B.Sc., B.Ed.
14. **Mr. B. Uthathathaue** M.Sc., B.Ed., PGDCA.
15. **Mr. A. Arokia Doss** M.A., B.Ed.
16. **Mr. J. Francis Ferdinand** M.A., B.Ed., M.Phil.
17. **Mr. S. Joe Anand** B.Sc., B.Ed.
18. **Mrs. S. Jaya Rani** M.A., B.Ed.
19. **Mrs. M. Mary Sheeba** M.A., M.Ed.
20. **Mr. D. George Jerold** B.A., B.Ed.
21. **Mr. A. Johnson** M.A., B.Ed.
22. **Mr. S. Arockia Doss** B.Sc., B.Ed.
23. **Miss. P. Arasi** M.Sc., B.Ed.
24. **Mr. A. Suresh Kumar** B.Sc., B.Ed.
25. **Miss. M. Bella Bernet Mary** B.Sc., B.Ed.

## SECONDARY GRADE STAFF

26. **Mrs. ASM. Magdalene** B.A., B.Ed., AHM
27. **Mrs. D. Arul Mary** B.Lit., M.A., B.Ed.
28. **Mrs. G. Selvet Mary** B.Lit., M.A., B.Ed.
29. **Mrs. D. Mary Stella** D.T.Ed.
30. **Mrs. A. Shakila** B.Sc., M.A., B.Ed.
31. **Mrs. A. Shanthi** T.T.C.

## PHYSICAL EDUCATION STAFF

32. **Mr. L. Johnson** B.PED., M.PEd.
33. **Mr. A. Mathew** B.Sc., B.PEd.

## MANAGEMENT STAFF

34. **Mrs. T.C. Veni,** MA., B.Ed.,
35. **Mr. J. Arun amudhan** MA., B.Ed.,
36. **Mr. G. Vignesh** M.Sc., B.Ed.,
37. **Mrs. V. Manimala** MA., B.Ed.,
38. **Mr. X. Anthony Suil Deepak** MA., B.Ed.,
39. **Mrs. M. Munju** MA., B.Ed., DCEd.,

## OFFICE STAFF

40. **Mr. D.X. Paulraj** B.Sc.,
41. **Mr. R. Karunanithi**, MA., B.Ed.,

## NON-TEACHING STAFF

42. **Mr. Lourdunathan**, B.Com.
43. **Mr. A. Selvaraj**

## MID-DAY MEALS STAFF

1. **Mrs. Tamilarasi** B.Sc. (Organiser)
2. **Mrs. Christina** (Helper)

## MANAGEMENT NON-TEACHING STAFF

1. **Mr. P. Paul Sundar**
2. **Mrs. Usha**
3. **Mrs. Helen**
4. **Mr. S. Vincent**
5. **Mr. Paneer Selvam**

# PARENT'S - TEACHER'S ASSOCIATION

1. **Rev. Fr. Jesu Manickam SDB** – Correspondent
2. **Rev. Fr. Stephen Kulandai Raj** SDB - Headmaster
3. **Rev. Fr. Felix Raja Mani** SDB Vice Rector
4. **Mr. S.Munivel**, President
5. **Mr. Jayaseelan**, Vice President
6. **Mr. N. Charles** Member
7. **Mrs. R. Badma** Member
8. **Mr. M. Christopher** Member
9. **Mrs. D . Puvila** Member
10. **Mr. k. Madheshwaran** Member
11. **Mr. Sundharamurthi** Member
12. **Mr. A. Navyraj** Member
13. **Mr. M. Martin Joseph** Member
14. **Mrs. ASM. Magdalene** Member



**புனித தொன்போஸ்கோ (நிறுவனர். சலேசிய சபை)**

இத்தாலி நாட்டிலுள்ள பெக்கி என்னும் சிற்றூரில், ஏழை குடும்பத்தில் பிரான்சிஸ் போஸ்கோ - மார்கரீத் ஒக்கியேன ா எனும் தம்பதியருக்கு 1815 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 16 ஆம் நாள் தொன்போஸ்கோ பிறந்தார், அவரின் இரண்டாவது வயதில் தந்தையை இழந்ததால் துன்பத்திலும் வறுமையிலும் வாழ நேர்ந்தது. எனினும் மார்கரீத் அன்னை யின் பக்தியும், அயராத உழைப்பும் குடும்பத்தை அன்புற வில் நிலைக்கச் செய்தன, தொன்போஸகோவின் ஒன்பதாவது வயதில் இயேசுவும் அன்னை மரியாளும் கனவில் தோன்றி, இளைஞர்களை அன்பால் ஆட்கொள்ளும்படி கூறினார். அக்கனவால் உந்தப்பட்ட அவர் பல இடையூறுகளுக்கு மத்தியிலும் படித்து ஒரு குருவாக வேண்டுமென விரும்பினார்.

பன்னிரண்டாம் வயதில் பல இடங்களில் பேவை செய்தார், பதினான்காம் வயதில் ஓர் ஆசிரியரைக் கண்டறிந்தார். பதினைந்தாம் வயதில் தொடர்ந்து பல வேலைகளைச் செய்து கொண்டு பள்ளியில் படித்தார். இருபத்தாறாம் வயதில் (1841 ) அவர் ஒரு குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார்

அதே ஆண்டில். தூதரின் மாநகரில் இருந்த திக்கற்ற ஏழை அனாதை சிறுவர்களின் நலனுக்காக, பாழடைந்த பினார்தி கொட்டகையில் ஆரட்டரி என்னும் பெயரில் தம் பணியைத் தொடங்கினார். இன்னல் இடையூறுகளை இளமையில் கண்ட அவர், சமையல் கூடத்தையும் பள்ளிக் கூடமாக்கி மாணவர்களுக்குக் கல்வி புகட்டினார்.

அறிவு வழி, அறவழி. அன்புவழி என்னும் காப்பு முறைக் கல்வித்திட்டதை அறிமுகப்படுத்தி தாம் வாழ்ந்த சமுதாயத்தில் பெரும் மாற்றத்தை உண்டாக்கினார். அதன ால், சிறு வகுப்பறைகள் பெரும் கல்விக் கூடங்களாகவும்,

கைத்தொழில் வகுப்பறைகள் தொழிற் கூடங்களாகவும் மாறின. இளைஞர்களுக்கான வளர்ச்சியடைந்து அவரிடம் படித்த மாணவர்களே அருட்சகோதர்களாகவும், திருநிலைப்படுத்தப்பட்ட குருக்களாகவும் தொன்போஸ்கோவின் சலேசியர்கள் என்னும் பெயரால் அவர் பணியைத் தொடர்ந்தன ர், பொதுமக்கள் சிலரும் தாராளமாக உதவி செய்தனர்.

**யார் இந்த தொன் போஸ்கோ**

அவர் ஒரு சமூக சேவகர், புனிதர், கல்வியாளர் - இது வரலாற்று அறிஞர்களின் கூற்று.

அவர் ஒரு நற்செய்தி போதகர். செய்தி வெளியீட்டாளர், கட்டடக் கலைஞர் - இது பொது மக்களின் புகழாராம்.

கட்புலனுக்கு அப்பாற்பட்டதைக் காண்பவர், அக்கனவுகளை நனவாக்கியவர், அற்புதங்கள் செய்தவர் - இது உளவியல் வல்லுநர்களின் வியப்பு.

தொலைநோக்குப் பார்வையாளர், இறைவனின் தூதர் ஆன்மவேடர் - இது துறவறத்தாரின் நம்பிக்கை.

எனினும் ஆன்மாக்களை எனக்கு வேண்டும். வேறெ துவும் வேண்டாம் என்னும் விருதுவாக்கை கடைபிடித்து நீ இளைஞன் அது போதும் நான் உன்னை அன்பு செய்ய என்று கூறி இளையோரை அன்பு செய்து வாழ்ந்த மாமனிதர் தான் தொன்போஸ்கோ.இளையோரின் மனதைக் கவர்ந்து, அவர்களுக்கு உணவளித்து மகிழச் செய்து, அறிவைப்புகட்டி அவர்களது ஆன்மாவை அமைதியால் நிரப்பிய தூய குருவானவர் தொன்போஸ்கோ, அவர் தமது 72 ஆம் வயதில் (31.01.1888) இறைவனடி சேர்ந்தார்.

கத்தோலிக்க திருச்சபையானது, அவரை இளைஞர்களி தந்தையாகவும் ஆசிரியராகவும் அறிவித்துள்ளது. தொன் போஸ்கோவவின் சலேசியர்கள், சகாய அன்னையின் புதல்வியர்கள், சலேசிய உடன் ஒத்துழைப்பாளர்கள், முன்ன ாள் மாணவர்கள் என இலட்சக்கணக்கான தொண்டர்கள்,

அவர் அன்று ஆற்றிய பணியை இன்று 132 நாடுகளில் ஆயிரக்கணக்கான நிறுவனங்களில், கோடிக்கணக்கான இளைஞர்களின் முன்னேற்றத்திற்காகத் தொடர்ந்து செயலாற்றி வருகின்றனர்.



**தோமினிக் சாவியோ ( 1842 - 1857)**

ரிவா நகரத்தில் எளிய குடும்பத்தில் பிறந்த இவர் 1854 ஆம் ஆண்டு தொன்போஸ்கோவின் கல்வி நிறுவனத்தில் சேர்ந்தார். அங்கு தொன்போஸ்கோவின் அரவணைப்பில் கல்வியிலும் ஒழுக்கத்திலும் சிறந்து விளங்கினார். பெரியோர் மற்றும் நண்பர்களின் பெருமதிப்பையும் பெற்றார். பாவம் செய்வதை விட சாவதே மேல் என்பது இவரது விருது வாக்கு.

## எம் பள்ளியின் வரலாறு

இளைஞர்களின் தந்தை என்றழைக்கப்படும் புனித தொன் போஸ்கோவால் நிறுவப்பட்ட சலேசிய சபையைச் சார்ந்தவர்களால் 1945 ஆம் ஆண்டு தூய நெஞ்சக் கல்லூரி வளாகத்தில் எம் பள்ளி தூய நெஞ்ச ஆரம்ப பள்ளியாக ஆரம்பிக்கப்பட்டு 1947- ஆம் ஆண்டு தூய நெஞ்ச நடுநிலைப்பள்ளியாக வளர்ச்சியடைந்தது. 1952 - ஆம் ஆண்டு தூய நெஞ்சக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டதையடுத்து இன்றுள்ள இடத்தில் விடுதியுடன் கூடிய பள்ளியாக தனிச் சிற ப்புடன் தூய நெஞ்ச நடுநிலைப்பள்ளி என்ற பெயரிலேயே தனித்து செயல்படத் தொடங்கியது.

மாணவர்கள் வழிகாட்டியாகிய புனித தோமினிக் சாவியோவின் நூற்றாண்டு விழாவையொட்டி 1953 - ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 9 ஆம் நாள் முதல் தூய நெஞ்ச நடுநிலைப்பள்ளி என்ற பெயர் மாற்றம் செய்யப்பட்டு புனித தோமினிக் சாவியோ நடுநிலைப்பள்ளி என்ற பெயரில் தம்பணியைத் தொடர்ந்தது.

இருபத்தைந்தாண்டுகள் அறியாமை இருளகற்றி அறிவொளி பரப்பி வெள்ளிவிழா கண்டபின் 1978 ஆம் ஆண்டு ஜ ன் திங்கள் ஐந்தாம் நாள் உயர்நிலைப்பள்ளியாக உயர்த்தப்பட்டது. நிர்வாக நலன் கருதி துவக்கப்பள்ளி தனியாகவும், உயர்நிலைப்பள்ளி தனியாகவும் ஒரே நிர்வாகத்தின் கீழ் தனித்து செயல்படத் தொடங்கின. 1984 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் இருபத்தைந்தாம் நாள் தோமினிக் சாவியோ மேல் நிலைப்பள்ளியாக உருவெடுத்தது. ஆய்வுக் கூட வசதிகளுடன் கூடிய புதிய கட்டிடங்களும் தோன்றின.

இன்று ஆல்போல் தழைத்து அருகுபோல் வேரூன்றி மாணவர்களிடையே கல்வி, ஒழுக்கம் ஆன்ம வளர்ச்சி ஆகியவற்றை வளர்த்து வரும் இப்பள்ளியின் வளர்ச்சியில் நிர்வாகத்தின் அறத் தொண்டும், ஆசிரிய சான்றோர்களது கடின உழைப்பும் பெற்றோர்களது ஒத்துழைப்பும் மாணவர்களது விடாமுயற்சியும் போற்றுதற்குரியதாகும்.

## பள்ளியின் குறிக்கோள்

**தோமினிக் சாவியோ மேனிலைப்பள்ளி, திருப்பத்தூர்.**

சென்னையில் தலைமைச் செயலகம் கொண்ட தென் இந்திய சலேசிய சபையினரால் நிறுவப்பட்டு நடத்திவரப்படுகின்றது. இப்பள்ளி திருப்பத்தூரில் அலுவலகம் கொண்டுள்ள திருப்பத்தூர் தோமினிக் சாவியோ ஆர்பனேஜ் சொசைட்டி (Societies Registriation Act XXI 1860 S.No . 55 of 1973 ) என்னும் பதிவு செய்யப்பட்ட சொசைட்டிக்குச் சொந்தமானது.

**பள்ளியின் கொள்கை: (MISSION)**

தொன்போஸ்கோ கல்வி நிறுவனங்களில் மாணவர்களின் நிலையான மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட உடல், உள்ளம் மற்றும் ஆன்மீக வளர்ச்சி

**செயல்முறைப் பார்வை : (VISION)**

**ஆன்மீகம் :** மாணவர்களை ஆன்மீகத்தில் முன்னேற்றம் அடையச் செய்ய கடவுள் பக்தி, பெரியோரை மதித்தல், உற்றார் உறவினர் உறவுகளை வளர்த்தெடுத்தல்.

**மனநலம் :** மாணவர்களின் படைப்பாற்றல் பொறுப்புணர்வு, ஒத்துழைப்பு போன்ற பண்புகளை மேம்படுத்துவதன் மூலம் உலகின் சிறந்த மனிதனாக்குவது.

**உடல் :** மாணவர்களின் உடல் வளர்ச்சிக்குத் தேவையான விளையாட்டின் மூலம் உடல் வளர்ச்சியைப் பேணிக்காத்தல்.

மாணவர்களின் கல்வி வளர்ச்சியை மேம்படுத்துவதற்கான வழித்திட்டங்கள்

1. கல்வி மற்றும் பண்பாடு
2. மறைபரப்பு மற்றும் மறைக்கல்வி
3. குழுக்கள் மற்றும் இயக்கங்கள்
4. வாழ்கை வழிகாட்டி நெறிமுறைகள்
5. சமூக விழிப்புணர்வு
6. சமூகத் தொடர்பு

# எமது பள்ளியின் சின்னம்

மேற்காண் சின்னமே எங்கள் பள்ளியின் சிறப்புச் சின்னம். இது நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு பச்சை, சிவப்பு, மஞ்சள், நீலம் ஆகிய நான்கு வண்ணங்களில், இப்பள்ளியின் நான்கு இல்லங்களைக் குறிக்கிறது.

நடுவில் பொன்னிறத்தில் அமைந்துள்ள சிலுவை, இறை வுணர்வையும், அன்பையும் குறிக்கும்.

சிலுவையின் நடுவில் அமைந்துள்ள புத்தகமும், சுடரும் அறியாமை இருள்நீக்கி அறிவொளி பெற கல்வியே அடிப்படை என்பதைக் குறிக்கும்.

இரு புறமும் பச்சை வண்ணத்தில் அமைந்துள்ள இலைக்கூட்டு ஒற்றுமையையும், கட்டுப்பாட்டையும் குறிக்கும்.

சின்னத்தின் கீழ் பள்ளியின் குறிக்கோளான

**உழைப்பு உயர்வு தரும்**

எனும் வாசகம் அமைந்துள்ளது

# பாடத்திட்டம்

**1. இடைநிலை, உயர்நிலை**

பள்ளிப் பாடத்திட்டத்தில் தமிழ் பயிற்று மொழியாகும், மறைக்கல்வி, நன்னெறிக்கல்வி, ஆங்கிலம், கணிதம், அறிவியல், சமூக அறிவியல், உடற்கல்வி, ஓவியம், சுற்றுச்சூழல் கல்வி ஆகிய பாடத்திட்டத்தில் அடங்கும்.

**2. மேல்நிலை மாணவர்களுக்கான பாடப்பிரிவு பின்வருமாறு:**

தாள் - I : தமிழ்
தாள் - II : ஆங்கிலம்
தாள் - III

பாடப்பிரிவு I குறியீடு 2502 : இயற்பியல், வேதியியல், கணிதம், கணினிஅறிவியல்

பாடப்பிரிவு II குறியீடு 2503 : இயற்பியல், வேதியியல், கணிதம், உயிரியல்

பாடப்பிரிவு III குறியீடு 2922 : கணிதம், அடிப்படை மின்பொறியியல் (BEE), வேலைவாய்ப்புத் திறன் பயிற்சி (ESK)

பாடப்பிரிவு IV குறியீடு 2701 : பொருளியல், வணிகவியல், கணக்குப் பதிவியல், புள்ளியியல்

பாடப்பிரிவு V குறியீடு 2701 : பொருளியல், வணிகவியல், கணக்குப் பதிவியல், வரலாறு

**இணை பாடத்திட்டம்**

பள்ளிப் பாடத்திட்டத்துடன் இணை பாடத்திட்டமாக பல குழு முறை திட்டங்களுக்கும் நுண்கலைப் பயிற்சிகளும் அளிக்கப்படுகின்றன.

### 1. குழு அமைப்பு முறை

பள்ளிப் பாடத்திட்டத்துடன் ஆக்கப்பூர்வமான போட்டி உணர்வை மாணவர்களிடையே வளர்ப்பதே குழு அமைப்பின் நோக்கம், பள்ளியில் பயிலும் அனைவரும் போஸ்கோ, சாவியோ, தாமஸ் ஆகிய குழுக்களின் ஏதேனும் ஒன்றில் உறுப்பினராக இருப்பர்.பள்ளிக்கு வரும் ஒவ்வொரு நாளும் மாணவர்களுக்கு ஒவ்வொரு மதிப்பெண் சேரும். மேலும் படித்துத் திறன், நன்னடத்தை, தியாக மனப்பான்மை, கலை நிகழ்ச்சிகளில் பங்கெடுத்தல், விளையாட்டுகள், பந்தங்கள், வெளிப்போட்டிகளில் பெறும் தேர்ச்சி ஆகியவற்றிற்கும் மதிப்பெண்கள் அளிக்கப்படும்.

ஒழுங்காக பள்ளிக்கு வராமை - காலந்தாழ்த்தி வருதல், பள்ளிக்கையேடு கொண்டுவராமை, சீருடையின்மை, வீட்டுப்பாடம் செய்யாமை, ஒருங்கின்மை போன்றவற்றிற்காக மதிப்பெண்கள் குறைக்கப்படும். வார இறுதியில் குழுக்களின் மதிப்பெண்கள் கணக்கிடப்படும், அதற்கேற்றாற்போல் குழுக்கொடி காலைக் கூட்ட நேரத்தில் ஏற்றப்படும்.

குழு அமைப்பு முறை வெற்றி பெற அனைத்து மாணவர்களும் அவரவர் குழுக்களின் செயல்பாடுகளில் திறமையாக ஈடுபட்டு தங்கள் குழுத்தலைவர்களுக்கு முழு ஒத்துழைப்யைபும் அளிக்க வேண்டும்.

### 2. விளையாட்டுகள்

கால்பந்து, கூடைப்பந்து, கையுந்து பந்து, வளைகோல் பந்து, மட்டைப் பந்து, இறகு பந்து போன்ற விளையாட்டுகளுக்கு பள்ளியில் முறையான பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

### 3. இயக்கங்கள்

மாணவர்களின் ஆன்ம, மன உடல் வளர்ச்சிக்கு உதவும் வண்ணம், பள்ளியில் பல இயக்கங்களும், குழுக்களும் செயல்பட்டு வருகின்றன.

## பாட இணை செயல்பாடுகள்

**1. விழுமக்கல்வி :** நீதிக்கதை, நீதி போதனை, நன்னெறிக் கதை தேசிய ஒருமைப்பாடு, மதச்சார்பின்மை, சமத்து சமுதாயம்.

**2. உடல் நலம் மற்றும் சுகாதாரக் கல்வி :** எளிய மற்றும் சத்தான உணவுகள் தொற்று நோய்கள், தன் சுத்தம் அறிதல், உடற்பயிற்சியும் ஆரோக்கியமும்

**3. கலைக்கல்வி** நாட்புறக் கலைகளைப் பற்றிக் கூறுதல், இயல் இசை, நாடகத்தைப் பற்றிக் கூறுதல்.

**4. பணி அனுபவம் :** பொம்மை செய்தல், பூ சேலைப்பாடு, மணி வேலைப்பாடு, காகித வேலைப்பாடு, (ஓரிகமி), வாழ்க்கைக் கல்வி, தன்னைப் பிறர் நிலையில் வைத்துப் பார்த்தல், சிக்கலுக்குத் தீர்வ காணுதல், சுமூகமான நட்புறவு, கூர் சிந்தனைத் திறன், படைப்பாற்றல் திறன், மன அழுத்தத்தைத் தவிர்த்தல், தன்னை அறிதல்.

**5. சுற்றுச்சூழல் கல்வி :** மாசு கட்டுப்படுத்ததுதல் (நிலம், நீர், காற்று) மரங்கள் வளர்த்தல், காடுகளைப் பாதுகாத்தலின் அவசியம், பிளாஸ்டிக் பயன்படுத்துதலைத் தவிர்த்தல், ஓசோன் மண்டலத்தைப் பாதுகாத்தல், நன்னீரின் முக்கியத்துவம், மழைநீர் சேகரிப்பு, இயற்கை வளங்களைப் பாதுகாத்தல்.

**6. முதலுதவி மற்றும் தற்காப்பு விதிகள் :** முதலுதவி, சாலை விதிகள் அறிதல், பேரிடர் மேலாண்மை, வெள்ளம், தீ, நிலநடுக்கம், விபத்து போன்ற காலங்களில் தற்காத்துக் கொள்ளுதல் பற்றி அறிதல் அவசரக் கால தொடர்பு எண்களை அறிதல்

**மதிய உணவு இடைவேளைக்குப் பிந்தைய செயல்பாடுகள்**

1. வாய்ப்பாட்டைச் சொல்லுதல்

2. ஆறுமுதல் எட்டாம் வகுப்பு வரை தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் இரண்டு இரண்டு சொற்களை சொல்வதை எழுதச் செய்தல், வாக்கியமாக அமைத்தல்.

3. ஒன்பதாம் வகுப்பிற்குத் தமிழ், ஆங்கிலத்தில் 2 நிமிடம் பொது அறிவு சம்பந்தமாகப் பிழையின்றி பேசுதல், பேச்சு மற்றும் குழு உரையாடல் (Group Discussion)

**வார இறுதி நாள் செயல்பாடுகள்**

ஒவ்வொரு வாரமும் வெள்ளிக்கிழமையன்று இறுதி பாடவேளையில் கீழ்க்கண்ட செயல்பாடுகள் செய்யப்பட வேண்டும். மாணவர்களின் பன்முகத்திறனை வெளிப்படுத்தும் வகையில் பேசுதல், நடித்தல்ஆடுதல், பாடுதல், நகைச்சுவை கூறுதல், மனக்கணக்கு கூறுதல், பொன் மொழிகள் கூறுதல், படைப்பாற்றல் போன்ற செயல்பாடுகளை ஒவ்வொரு மாணவரும் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

**மாதச் செயல்பாடுகள்**

ஒவ்வொரு மாதமும் முதல் வாரத்தின் வெள்ளிக்கிழமைகளில் கடந்த மாதத்தில் மாணவர்கள் தயாரித்த தனித்திறன், படைப்பாற்றல்கள் மற்றும் வகுப்பு மாதிரித் தேர்வுகளின் மதிப்பெண்களை மாணவர்களின் பெற்றோர்களை வரவழைத்துக் கலந்தாய்வு செய்தல்.

**இதர இணைச் செயல்பாடுகள்**

கீழ்கண்ட செயல்பாடுகள் மாலை நேரங்களில் (பள்ளி வேலை நேரத்திற்குப் பிறகு) நடைபெறுதல் வேண்டும்.

1. தமிழ் இலக்கிய மன்றம்
2. ஆங்கில இலக்கிய மன்றம்
3. கணித மன்றம்
4. அறிவியல் மன்றம்
5. இயற்பியல் மன்றம்

6. வேதியல் மன்றம்
7. உயிரியல் மன்றம்
8. சமூக அறியியல் மன்றம்
9. தொன்மை பாதுகாப்பு மன்றம்
10. வாக்காளர் விழிப்புணர்வு & மனித உரிமை மன்றம்
11. வரலாறு மன்றம்
12. பொருளியல் மன்றம்
13. வணிகவியல் மன்றம்
14. வானவில் & வினாடி வினா மன்றம்
15. நூலக மன்றம் & இதழியல் மன்றம்
16. நுகர்வோர் மன்றம் & குழந்தை உரிமை பாதுகாப்பு மன்றம்
17. செஞ்சுருள் மன்றம் (RRC) & போதை பொருள் ஒழிப்பு மன்றம்
18. பேரிடர் மேலாண்மை மன்றம்
19. நுண்கலை மன்றம் & கவின்கலை மன்றம்
20. இசை மன்றம்
21. நாடக மன்றம்
22. நிகழ்த்து கலை (Dance Club)
23. திரைப்பட மன்றம் & ஊடக மன்றம்
24. உயர்கல்வி வழிகாட்டி & தொழிற்கல்வி மன்றம்
25. விளையாட்டு & உடல்நலம் - சுகாதாரம்
26. பொது அறிவு மன்றம்
27. RRC
28. சாரணர் இயக்கம்
29. இளையோர் செஞ்சிலுவை இயக்கம்
30. நாட்டு நலப்பணித் திட்டம்
31. சாலை பாதுகாப்பு மன்றம்
32. சுற்றுசூழல் & தேசிய பசுமைப்படை
33. மாணவர் காவலர் படை

# விதிமுறைகள்

## பொதுத் தகவல்கள்

### 1. பணி நேரம்

1.1 முற்பகல் 8.45 மணிமுதல் பிற்பகல் 1.10 மணிவரை பிற்பகல் 1.55 மணி முதல் 4.10 மணி வரை

1.2 சனிக்கிழமைகளில் சிறப்பு வகுப்புகள். செய்முறை பயிற்சி வகுப்புகள் நடைபெறும்

1.3 மாணவர்களின் நலன் கருதி பள்ளியின் அனைத்து நுழைவாயில்களும் காலை 8.45 மணி முதல் மாலை வகுப்புகள் முடிக்கின்ற வரை மூடப்பட்டிருக்கும்.

1.4 மாணவர்கள் காலை 8.30 மணிக்குள் பள்ளிக்கு வர வேண்டும்

### 2. பள்ளிப் பேரவை

2.1 காலை 8.45 மற்றும் மதியம் 1.55 மணியளவில் அறிவிப்பு மணி அடிக்கப்பட்டதும் மாணவர்கள் பள்ளிப் பேரவை நடைபெறும் இடத்தில் அல்லது தாழ்வாரங்களில் வரிசையில் அமைதியாக நிற்க வேண்டும்.

2.2 இரண்டாம் மணி காலை 8.50 மற்றும் மதியம் 2.00 மணியளவில் அடித்ததும், இறைவணக்கம் ஆரம்பமாகும்.

2.3 இறை வணக்கத்தின் போது அனைவரும் பக்தியோடும், ஒழுக்கத்தோடும் பங்கேற்க வேண்டும்.

2.4 பள்ளி முடியும் தருவாயில், இறைவணக்கத்திற்குப் பின் மாணவர்கள் அமைதியாக கலைந்து செல்ல வேண்டும்.

## 3. சீருடை

3.1 6, முதல் 8ம் வகுப்பு வரை : வெள்ளை அரைக்கை சட்டை, சாம்பல் நிற முழுக்கால் சட்டை, சாம்பல் கருப்பு நிற சாக்ஸ், கயிறு கட்டும் கருப்பு ஷீ டை, பள்ளியின் பெல்ட், அடையாள அட்டை

9 முதல் 12ம் வகுப்பு வரை : வெள்ளை அரைக்கை சட்டை, சாம்பல் நிற முழுக்கால் சட்டை, சாம்பல் கருப்பு நிற சாக்ஸ், கயிறு கட்டும் கருப்பு ஷீ டை, பள்ளியின் பெல்ட், அடையாள அட்டை

3.2 ஒவ்வொரு புதன் கிழமை மற்றும் சனிக்கிழமைகளில் பருவத் தேர்வு நாட்கள் தவிர்த்து குழுபனியன், சாம்பல் கருப்பு நிற சாக்ஸ், கயிறு கட்டும் வெள்ளை ஷீ டை, பள்ளியின் பெல்ட், அடையாள அட்டை ஆகியவற்றை அணிந்து வர வேண்டும்.

3.3 தூய்மையான முழுச் சீருடை அணியாத மாணவர்கள் வகுப்பிற்குள் அனுமதிக்கப்படமாட்டார்கள்.

## 4 சீரொழுங்கு

4.1 மாணவர்கள் பள்ளி வளாகத்திற்குள் வரும் ஒவ்வொரு நாளும் (விழா நாட்கள் உட்பட), தூய்மையான பள்ளிச் சீருடையை அணிந்து வரவேண்டும்.

4.2 தலைமுடி, நகம் ஆகியவை ஒழுங்காக வெட்டப்பட்டிருக்க வேண்டும். முறையற்ற சிகை அலங்காரம், காதணி, செயின் விலை உயர்ந்த ஆபகரணங்கள் அணிந்து வரக்கூடாது.

4.3 அடையாள அட்டை, டை, பெல்ட் மற்றும் சாக்ஸ், ஷீ ஆகியவற்றை அணிந்து வர வேண்டும்.

4.4 பள்ளிப் பேரவை, வகுப்பறை, கலையரங்கம் மற்றும் இடைவேளைகளில் மாணவர்கள் அவரவர்க்கு கொடுக்கப்பட்ட இடங்களில் மட்டுமே நிற்கவோ, அமரவோ வேண்டும்.

4.5 மாணவர்கள்,பள்ளியிலுள்ள மாணவர் தலைவர்கள், கண்காணிப்பு தலைவர்கள் மற்றும் வகுப்புத் தவைவர்களுக்குக் கீழ்படிந்து நடக்க வேண்டும்.

4.6 பள்ளியில் கத்துணவு உண்பவர்கள் தவிர அனை த்து மாணவர்களும் மதிய உணவு கொண்டு வரவேண்டும்.

4.7 சக மாணவரின் உணவை அனுமதியின்றி உண்பது தண்டனைக்குரியது.

## 5. சேர்க்கை

5.1 பள்ளியில் மாணவர்களின் சேர்க்கை இந்த நிறுவனத்தின் கொள்கைகளுக்கு உட்பட்டு, தாளாளர் அவர்களாவும் நிர்வாகக் குழுவாலும் நடத்தப்படுகின்றது.

5.2 பள்ளியில் மாணவர் சேர்க்கை ஆறாம் வகுப்பு மற்றும் பதினொன்றாம் வகுப்புகளுக்கு மட்டுமே நடைபெறுகிறது.

5.3 மாணவர் தாம் படித்த பள்ளியிலிருந்து மாற்றுச் சான்றிதழ் மற்றும் நன்னடத்தைச் சான்றிதழைக் கொண்டு வர வேண்டும்.

5.4 நம் பள்ளியில் படிக்கும் பத்தாம் வகுப்பு மாணவர்களின் ஒழுக்கம், வருகைப் பதிவு, வர்வத் தேர்வுகள் மற்;றும் மூன்று திருப்புதல் தேர்வுகளில் அவர்கள் பெறும் மதிப்பெண்கள் ஆகியவை, பள்ளியின் நிர்வாகக் குழுவினர்க்கு (Educative Academic Council) திருப்தி அளித்தால் மட்டுமே அவர்கள் பதினொன்றாம் வகுப்பில் சேர்ந்து படிக்க அனுமதிக்கப்படுவார்கள்.

**அ. மாற்றுச் சான்றிதழ் பெறும் முறை :**

5.5 பெற்றோரோ அல்லது பாதுகாவலரோ தலைமை ஆசிரியருக்கு விண்ணப்பம் செய்து தான் மாற்றுச் சான்றிதழ் பெற முடியும்.

5.6. கடைசியாய் பள்ளிக்கு வந்த நாளிருந்து 12 மாதங்கள் கழித்து, சான்றிதழ் கேட்டால் அதைத் தேடும் கட்டணமாக ரூ. 2/- செலுத்த வேண்டும்.

5.7. பள்ளிக்கு முன் சேர வேண்டிய தொகையைச் செலுத்தாதவர்களுக்கு எந்த வகையான சான்றிதழும் கொடுக்கப்பட மாட்டாது.

5.8. பள்ளி வேலைகள் விடுமுறை நாட்களில் கவனிக்கப்பட மாட்டாது.

**6. கால தாமதமின்மையும், வருகைப் பதிவேடும்**

6.1 மாணவர்கள் குறித்த நேரத்தில் பள்ளிக்கு வரவேண்டும். தூமதமாக வருபவர் உதவித் தலைமையாசிரியரிடமிருந்து எழுத்துப் பூர்வமான அனுமதி பெற்ற பின்னரே வகுப்பறைக்குச் செல்ல வேண்டும்.

6.2 மாணவர்கள் விடுமுறை விண்ணப்பம் கொடுக்காமல் விடுமுறை எடுத்தல் கூடாது. அவ்வாறு முன் அனுமதியின்றி விடுப்பு எடுத்திருப்பவர்கள் மீண்டும் பள்ளிக்கு வரும்போது, பெற்றோரிடமிருந்து விடுமுறைக் கடிதத்தை அதற்கான காரணத்துடன் கொண்டுவந்து கொடுத்து உதவித் தலைமை ஆசிரியரின் கையொப்பம் வாங்கிய பின்னரே வகுப்பறைக்குள் நுழைய வேண்டும்.

6.3 காலையில் பள்ளிக்கு வந்து இடையில் வீட்டிற்குச் செல்ல வேண்டிய சூழ்நிலையில் மாணவடீன தலைமை ஆசிரியரிடம் மட்டுமே விடுமுறை விண்ணப்பம் கொடுத்துவிட்டுச் செல்ல வேண்டும்.

6.4 உடல் நோய் காரணத்தால் மூன்று நாட்களுக்கு மேல் பள்ளிக்கு வர முடியாத நிலைமை ஏற்பட்டால் கூடுமான வரையில் விடுமுறை விண்ணப்பத்தை நேரிலேயோ அல்லது அஞ்சல் வழியாகவோ அனுப்ப வேண்டும். மீண்டும் பள்ளிக்கு வரும்போது மருத்துவச் சான்றிதழ் கொண்டு வர வேண்டும்.

6.5 முன்கூட்டியே விடுமுறை பெற்றாலன்றி ஒரு மாணவன் பள்ளிக்கு வராமருக்கக்கூடாது.

6.6 ஒரு மாணவன் பள்ளிக்குக் காலம் தாமதித்து வந்தாலோ அல்லது வராமருந்தாலோ தன் கையேட்டில் தக்க காரணம் காட்டி எழுதிக் கொண்டு வர வேண்டும். அப்படி எழுதி வராத மாணவன் பள்ளி நேரத்தில் வீட்டிற்கு அனுப்பப்படலாம். மேலும் அம்மாணவன் தலைமை ஆசிரியர், வகுப்பு ஆசிரியர் அனுமதியின்றி வகுப்பிற்குள் அனுமதிக்கப்படமாட்டான். தலைமை ஆசிரியர் கேட்டால் மருத்துவரிடமிருந்து சான்றிதழ் பெற்று வந்து கொடுக்க வேண்டும்.

